கலைச்செல்வி சிறுகதைகளில் பெண்ணிய அணுகுமுறைகளும் சிக்கல்களும்

ஆய்வாளர் மு உஷா
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்) தமிழ்த்துறை
பாரதி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சென்னை

நெறியாளர் முனைவர் ச. ஆமினா பர்வின்
இணைப்பேராசிரியர் (தமிழ்த்துறை)
பாரதி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சென்னை

ஆய்வுச்சுருக்கம்

நவீன இலக்கியங்கள் வாழ்க்கையை பிரதிபலிப்பதாக இருக்கின்றன. தனிமனித ஒழுக்கம், சமூகம், மனிதநேயம், பெண்களின் போராட்ட சிக்கல்கள் போன்றவற்றை காலந்தோறும் எடுத்து இயம்புகின்றன. கலைச்செல்வியின் சிறுகதைகளில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பற்றி எடுத்து இயம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை

எழுத்தாளர் கலைச்செல்வி சிறுகதைகளில் குடும்பங்களில் பெண்கள் தன் வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களைப் பற்றி எடுத்து இயம்புவதாக இக்கட்டுரை அமைகின்றது.

குடும்ப சூழலே குடும்ப சிக்கல்களுக்கு காரணமாக அமைகின்றன. குடும்பங்களில் ஆண் பெண் இருவரும் ஒருவருக்கொருவர் அடக்கி ஆளும் தன்மையில் தான் சிக்கல்கள் எழுகின்றன. சில காரணங்களால் பெரும்பாலும் பெண்களே பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

காதல் திருமணம் என்பது ஆண் பெண் இருவரும் விரும்பி திருமண செய்து கொள்ளும் முறையாகும். காதலிக்கும் பொழுது இருக்கின்ற அன்பு பாசம் அக்கறை திருமணதிற்கு பிறகு இருப்பதில்லை.

சவுந்தரி என்ற கதையில் சவுந்தரி கல்லூரி போக தொடங்கி இருந்தாள். அதே கல்லூரி வளாகத்திற்குள் எழுதுபொருள் கடை வைத்திருந்தான் பிரபு. ஒருவரைக்கொருவர் காதலித்து இரண்டாம் வருட படிப்பின் போதே திருமணம் செய்து கொண்டார்கள். சவுந்தரி படிப்பும் தொடரவில்லை. குழந்தை பிறந்து ஒரு வயது இருக்கும் நிலையில் குழந்தையையும் சவுந்தரியையும் விட்டு பிரிந்து சாமியாராக சென்றுவிட்டான். இந்நிலையில் தனியாக தவித்து நின்ற சவுந்தரிக்கு பூக்காரக்கா தமிழரசிதான் பூ விற்க கற்றுக் கொடுத்து குழந்தைக்கும் அவளுக்கும் பக்கபலமாக இருந்தாள். சாமியாராகி தன்னைவிட்டு பிரிந்து போன பிரபுவைப்பற்றி முழுவதுமாக மறந்து போனாள் சவுந்தரி. அவள் தன் மகனின் எதிர்காலத்திற்கு தன்னை முழுவதுமாக அர்பணித்தாள்.

சவுந்தரி படிக்க வேண்டிய காலத்தில் படிக்காமல் காதல் திருமணம் செய்து கணவனால் தனித்து விடப்பட்டு பூக்காரியாக மாறும் சூழ்நிலை உருவாகியது. இளம் பெண்கள் காதல் என்ற நம்பிக்கையில் ஏமாந்து போகாமல் கல்வியின் அவசியத்தை புரிந்து கொண்டு வாழ கற்றுக் கொள்ள வேண்டும் என்று இக்கதை உணர்த்துகின்றது.

சூரியின் அம்மா என்ற சிறுகதையில் சூரியும் அவன் அம்மா, அப்பா, அத்தை, அப்பாயி எல்லோரும் அவன் தாத்தா வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர்.

சூரியின் அத்தைக்கு திருமணம் நடந்த நிலையில் இரண்டே வருடத்திலேயே தன் கணவனை விட்டு பிரிந்து வந்துவிட்டாள். அவன் தாத்தா இறந்த நேரம் அவள் தாத்தா வீட்டிலேயே இருந்துவிட்டாள். கணவனை விட்டு பிரிந்ததை பற்றி அவள் கவலை கொள்ளவே இல்லை. சூரியின் அப்பா, அவர் அத்தையின் ஆலோசனை இன்றி அடுத்த அடி வைக்கக் கூடத்தயங்குவார். அத்தையும் அப்பாயியும் சூரியின் அம்மாவை அடித்து விரட்டுகின்றனர் தாயிடம் மகனை வாழவிடாமல் பிரித்து விடுகின்றனர். சூரியின் அம்மா அவள் கணவனோடு புகுந்த வீட்டில் இருக்கும் வரை வேலைக்குச்சென்றதில்லை. அம்மாயியும் அத்தையின் சூழ்ச்சியால் கணவனை விட்டு பிரிந்து சென்றபின் சூரியின் அம்மா அவளின் சித்தி வீட்டிற்குச் சென்றாள். அங்கு தனியார் நிறுவனம் ஒன்றில் வரவேற்பாளராக வேலை பார்த்துக்கொண்டு போட்டித்தேர்வுகளுக்கு தயார் ஆகி வெற்றியும் பெற்று அதிகாரியாக தேர்வாகி இருந்தாள். இச்செய்தியை சூரியின் அத்தை அறிந்துகொள்கிறாள்.

சூரியின் அப்பாவின் வேலையை வாரிசுரிமையின் அடிப்படையில் சூரி வாங்க நினைக்கையில் அவ்வேலையை வாங்க அதற்கான விலையைத்தான் அவர்களுக்கு ஏற்பாடு செய்ய முடியவில்லை. ஆகவே, அவள் அத்தை அவன் அம்மாவைச் சென்று பார்க்க கூறுகிறாள்.

சூரிக்கு தன் அம்மாவை பார்க்க வேண்டும் பேச வேண்டும் என்ற எண்ணம் கூட எழவில்லை. அந்த அளவிற்கு அவனின் அத்தை அம்மாவைப் பற்றி தவறாக பேசி மனதை வெறுப்புக்குள்ளாகி உள்ளாள். அவனுக்கு தன் அம்மாவுடன் இருப்பது போன்று இருக்கும் நிலையை கூட அவன் உணரவில்லை மாறாக அவளிடம் பணம் கேட்க வந்ததை அவமானாகக் கருதுகிறான்.

காசு வேணும் என்றான் பட்டடென்று. அப்போது யாரோ ஒருவர் கோப்புக்கட்டுடன் உள்ளே வந்தார். அக்கோப்பை காட்டி விளக்குவதற்காக அவர் பவ்யமாக குனிந்து பேச தொடங்கினார். அவள் அவரை இடை மறித்து சூரியை அறிமுகபடுத்தினாள். இவன் எம்புள்ள! என்று கூறினாள். அவள் அவன் மீது வைத்திருந்த அன்பு பாசம் எதுவும் குறையவில்லை. அவனை பார்த்து பேசியதில் மகிழ்ச்சி அடைகிறாள்.

சிறுவயதிலிருந்து அத்தையும் அப்பாயியும் அவனின் அம்மாவைப் பற்றி அவதூறாக பேசி அவன் மனதில் நஞ்சை கலந்துவிட்டனர். அவனுக்கு அம்மாவின் பாசம், அன்பு, கனிவு, எதுவும் புரியவில்லை. எல்லாமே வேஷமாகத் தான் அவனுக்கு தெரிந்தது. தன் அப்பாவை போன்றே அம்மாவைப்பற்றி அவதூறாக பேசினாலும் மௌனமாக இருக்கிறான். அம்மாவை பார்த்ததும் அவனுக்கு மனதில் அன்பு தோன்றவில்லை. அவனின் அத்தை அம்மாவைப் பற்றி கூறிய சொற்கள் நினைவுக்கு வருகின்றன.

சூரியை அவன் அம்மாவிடமிருந்து அத்தையும் அம்மாயியும் பிரித்து வைக்கும் கொடூரமனநிலை கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்களின் பாதுகாப்பிற்கும் பொருளாதார சூழலுக்கும் சூரியின் அப்பாவையும் சூரியையும் பயன்படுத்தினர் என்பதும் விளங்குகிறது.

கணவன் வீட்டில் வேலைக்குச் செல்லாத சூரியின் அம்மா வீட்டிலிருந்து வெளியில் விரட்டிய பிறகு படித்து அரசாங்க தேர்வெழுதி வெற்றியும் பெற்று உயர்வான பதவியும் அடைந்தாள். கணவன் வீட்டில் கிடைக்காத மரியாதை அவள் படிப்பிற்கும் வேலைக்காவும் மற்றவர்களால் மதிக்கப்படுகிறாள். பல போராட்டங்களுக்கு மத்தியில் மனவலிமையுடன் போராடினாள். தன மகனைப் பார்த்தவுடன் அவள் மனதில் ஆழமாக பதிந்திருந்த அன்பு வெளிப்பட்டது. தன் மகனை பிரிந்த நிலையிலும் அவளின் பாசம் குறையவில்லை.

குடும்ப உறவுகளால் ஒரு பெண் எதிர் கொள்ளும் போராட்டங்களையும் சிக்கல்களையும் இச்சிறுகதை முலமாக உணரமுடிகின்றது.

முடிவுரை

கல்வியின் அவசியத்தை கலைச்செல்வியின் சிறுகதைகள் மூலமாக உணரமுடிகின்றது.

எந்த சூழலிலும் பெண்களே பெரும்பாலும் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்பதும் தெரிய வருகிறது.

குடும்ப உறவுகளால் ஏற்படும் போராட்டங்களையும் சிக்கல்களையும் உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

கலைச்செல்வியின் சிறுகதைகளில் காணப்படும் பெண் பாத்திரங்கள் எந்த சூழலிலும் மனவலிமையுடன் தங்களுடைய சிக்கல்களை எதிர்கொள்ளக்கூடிய திறமையுடையவர்களாக இருக்கின்றனர் என்பது தெரியவருகின்றது.

துணைநூற்பட்டியல்

1. *சித்ராவுக்கு ஆங்கிலம் தெரியாது - சிறுகதைத் தொகுப்பு கலைச்செல்வி வாசக சாலை சென்னை - 59, முதற் பாதிப்பு - 2017.*